கோயிலந்தாதி

என்கின்ற

திருவரங்கத்தந்தாதி

மூலபாடம்.

அழகியமணவாளதாசர்

என்கின்ற

திவ்வியகவி-பிள்ளைப்பெருமாள்

ஐயங்கார்

கட்டளைக்கலித்துறையால் அருளிச்செய்தது

இஃது

ஸ்ரீ-மகாபாரதத்துக்குஎடிடராகிய

சேலம்-பொன்னம்பலக்கவிராயரால்

பார்வையிடப்பட்டு

கார்ணேடை

இலட்சுமணமுதலியாரால்

பொன்னேரி-முநிசாமிமுதலியார்

முருங்கைப்பாக்கை - வீராசாமிநாயகர்

இவர்களது

முத்தமிழ்மணிப்ப்ரவாளஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

சென்னைமாநகரம்.

பிலவங்கஹு-கார்த்திகைமீ

இதன்விலை-அணா-அ.

குறிப்பு

இந்நூலை வாசிக்கின்றவர்களுக்கும் வாசிப்பிக்கின்றவர்களுக்கும் இதினாலே தெரிவிக்கின்றது என்னவென்றால்-இதில்-சில கவிகளிலே - உயிர் எழுத்து முதல் ஆகி வருகின்ற அடிகளின் அந்தங்களில்- இருக்கிறகுற்றியல்உகரத்தின்பேரிலே*மெய்யீறெல்லாம்புள்ளியொடுநிலையல்* - *குற்றிய லுகரமு மற்றெனமொழிப* என்ற சூத்திரவிதிப்படிக்கு - சுழியிடப்பட்டிருக்கின்றது.

அந்தந்த அடியின் ஓசை கெடாமைப் பொருட்டு * சீருந்தளையுஞ் சிதையிற்சிறிய இஉ அளபோ - டாருமறிவரலகுபெறுமை - *என்றசூத்திரவிதிப்படிக்கு-அந்தகுற்றியல்உகரத்தைவிலக்கி அந்த ஒற்றை நிறுத்திக்கொண்டு வரும் அடியின் உயிரை-நின்ற ஒற்றின் மேலே ஏற்றி வாசிக்கவும் வாசிப்பிக்கவும்—யமகஅலங்காரமும்பொருளும் கெடாமைப்பொருட்டு-அந்தக்குற்றியல்உகரத்தை அதுஇருக்கின்றபடியே வைத்துக்கொள்ளவும்,

அவை வரும் ஆறு.

௫௰ - ம். கவியில் - ௨ - ம். அடியின் அந்தத்தில் - * புகழ்கைக்கு* என்று இருக்கின்றதை ஓசை நோக்கி - அந்த குற்றியல்- உகரத்தை விலக்கி * - புகழ்கைக்க் *- என்று நிறுத்திக்கொண்டு-வரும் அடியின்-* ஆர்*-என்ற சொல்லின் முதல் உயிரை அந்த ஒற்றின் மேலே ஏற்றி*-புகழ்கைக்கார்* - என்று வாசிக்கவும் வாசிப்பிக்கவும்.

௫௧-ம், கவியில்-௩-ம். அடியில்* வீடு*என்று இருக்கின்றதை ஓசை நோக்கி அந்தக் குற்றியல் உகரத்தை விலக்கி - *வீட்*என்று நிறுத்திக்கொண்டு-வரும் அடியின் * அமர*என்ற சொல்லின் முதல் உயிரை அந்த ஒற்றின்மேலே ஏற்றி-*விடமர*-என்று வாசிக்கவும் வாசிப்பிக்கவும்.

இவ்வாறே மற்றதுகளும்.

நன்றாக. குருவாழ்க. குருவே துணை.

திருவரங்கத்தந்தாதி

தனியன்.

மணவாளரவிந்தைமார்நோக்கவிம்மைமறுமையின்மா......*
மணவாளர்தம்பதம்வாய்த்திடுங்கோயிலில்வந்தவந்த.........*
மணவாளர்பொற்றிருப்பாதாம்புயங்கட்குமாலையென.......*
மணவாளர்சூடும்யமகவந்தாதியைவாசிமினே..................*

காப்பு.

ஓராழிவெய்யவன்சூழுலகேழுவந்தேத்தரங்கர்.....................*
காராழிவண்ணப்பெருமாளந்தாதிக்குக்காப்புரைக்கில்...............*
சீராழியங்கையிற்பொற்பிரம்பேந்தியசேனையர்கோன்...............*
கூராழிசங்கந்திருக்கதைநாந்தகஞ்சோதண்டமே....................(க)

வையம்புகழ்பொய்கைபேய்பூதன்மாறன்மதுரகவி...................*
அய்யன்மழிசைமன்கோழியர்கோனருட்பாண்பெருமாள்...............*
மெய்யன்பர்காற்பொடிவிண்டுசித்தன்வியன்கோதைவெற்றி.........*
நெய்யங்கைவேற்கலியன்றமிழ்வேதநிலைநிற்கவே.....................(உ)

சீதரன்பூமகள்சேனையர்கோன்றென்குருகைப்பிரான்.................*
நாதமுனியுய்யக்கொண்டாரிராமர்நல்லாளவந்தார்.....................*
எதமில்வண்மைப்பராங்குசதாசரொசித்தலைவர்.............................*
பாதமடைந்துய்ந்தவாழ்வானெம்பார்பட்டர்பற்றெமக்கே..........(௩)

திருமாலையாண்டான்றிருக்கோட்டிநம்பிதிருவரங்கப்.....................*
பெருமாளரையர்திருமலைநம்பிபெரியநம்பி...................................*
அருமால்கழல்சேரொதிராசர்தாளிற்சிங்காதனராய்...........................*
வருமாரியர்களெழுபத்துநால்வரொன்வான்றுணையே....................(௪)

மாறன்பராங்கிதந்தடியேனைமருட்பிறவி.......................*
மாறன்பரானகுழாத்துள்வைப்பான்றொல்லைவல்வினைக்கோர்......*
மாறன்பராமுகஞ்செய்யாமலென்கண்மலர்க்கண்வைத்த..........*
மாறன்பராங்குசன்வாழ்கவென்னெஞ்சினும்வாக்கினுமே........(௫)

நூல்

திருவரங்காவுறைமார்பாதிசைமுகன்சேவிப்பக்கந்.....................*
திருவரங்காதரித்தின்னிசைபாடத்திருக்கண்வளர்....................*
திருவரங்காவுன்பழவடியேற்கருள்செய்யவெழுந்....................*
திருவரங்காதவித்தேனுனக்கேதொண்டுசெய்வதற்கே..............(௧)

செய்யவளைக்குருவின்னருளாற்றிருத்தாள்வணங்கிச்..................*
செய்யவளைக்குலஞ்சூழரங்கேசன்சிறிதமுது.......................*
செய்யவளைக்கும்புவிக்குமங்காந்தசெவ்வாய்முகுந்தன்..............*
செய்யவளைக்குஞ்சிலம்பணிபாதங்கள்சேர்ந்தனமே.............(௨)

தனமாதரஞ்சொற்குதலைப்புதல்வர்தரணியில்லம்..................*
தனமாதரஞ்செயும்வாழ்வஞ்சியேதஞ்சநீயெனப்போந்..............*
தனமாதரங்கிக்கவெற்பெடுத்தாய்தண்ணனந்தசிங்கா.................*
தனமாதரங்குமுள்ளாயரங்காமுத்திதந்தருளே...................(௩)

தந்தமலைக்குமுன்னின்றபிரானெதிர்தாக்கிவெம்போர்..............*
தந்தமலைக்குமைத்தானரங்கேசன்றண்பூவினிடைத்...................*
தந்தமலைக்குத்தலைவன்பொற்பாதஞ்சரணென்றுய்யார்..............*
தந்தமலைக்கும்வினையினைவார்பலர்தாரணிக்கே....................(௪)

தாரணிதானவன்பாரிரந்தான்சங்கம்வாய்வைத்தொன்னார்.........*
தாரணிதானவஞ்செய்தானரங்கன்றமர்கள்பொருந்...................*
தாரணிதானவமராவதியுந்தருநிழலும்..............................*
தாரணிதானவயிராவதமுந்தருகினுமே..............................(௫)

தருக்காவலாவென்றுபுல்லரைப்பாடித்தன்விலைமா....................*
தருக்காவலாய்மயிலேகுயிலேயென்றுதாமதராய்த்...................*
தருக்காவலாநெறிக்கேதிரிவீர்கவிசாற்றுமின்பத்......................*
தருக்காவலாயுதன்பின்றோன்றரங்கர்பொற்றாளிணைக்கே.........(௬)

தாளத்தனத்தத்தைச்சொல்லிபரால்வருந்தாழ்மலபா..............*
தாளத்தனத்தத்தைத்தப்பநிற்பீர்புடைதங்கியவே...............*
தாளத்தனத்தத்தைத்தீர்த்தானரங்கன்சகடுதைத்த...............*
தாளத்தனத்தத்தையாயுதன்பாதந்தலைக்கொண்மினே..........(எ)

தலையிலங்காபுரஞ்செற்றானரங்கனென்றாழ்சொற்புன்கு..........*
தலையிலங்காதரஞ்செய்தபிரான்சரணன்றிமற்றோர்...............*
தலையிலங்காநின்றகண்ணிலங்காண்கைக்குதாழைக்குத்..........*
தலையிலங்காதிலங்கேட்கைக்குவாயிலஞ்சாற்றுகைக்கே..........(அ)

கைக்குஞ்சரமன்றளித்தாயரங்கமண்காக்கைக்குமாய்க்..........*
கைக்குஞ்சரமசரம்படைத்தாய்கடனீறெழத்து...............*
கைக்குஞ்சரமகரக்குழையாயெனைக்கைக்கொளுடல்..........*
கைக்குஞ்சரமதசையிலஞ்சேலென்றென்கண்முன்வந்தே.......(௯)

வந்தனையேற்றனையென்புன்சொற்கொண்டனைவன்மனத்தே.......*
வந்தனையேற்றனைபாவையுமாயினைவான்றரவு...............*
வந்தனையேற்றனைத்தொழுத்ததாளில்வைப்பாய்பலித்து..........*
வந்தனையேற்றனைத்தீர்த்தாயரங்கத்துமாதவனே...............(௰)

மாதங்கத்தானையரங்கனைவஞ்சனிலங்கையிலே...............*
மாதங்கத்தானையிருதிங்கடாழ்த்துப்பின்வாம்பரிதேர்..........*
மாதங்கத்தானைவலத்தானைமுன்வதைத்தானைத்தன்பால்..........*
மாதங்கத்தானைவைத்தானைவைத்தேனென்மதியகத்தே.......(௰௧)

மதிக்கவலைப்புண்டவெண்டயிர்போல்மறுகுறுமென்..........*
மதிக்கவலைப்புண்டணிகின்றிலேன்மண்ணும்வானகமும்..........*
மதிக்கவலைப்புனல்சூழரங்காநின்மனத்தருடா...............*
மதிக்கவலைட்புன்பிறப்பினிமேலும்வருங்கொலென்றே.......(௰௨)

வருந்துவரைப்பட்டமங்கையரொண்மர்மனங்களைக்க...............*
வருந்துவரைப்பட்டவாயரங்கேசனைவஞ்சப்பகை...............*
வருந்துவரைப்பட்டவேழமட்டானைமறந்துலகோர்...............*
வருந்துவரைப்பட்டவீப்போன்மடந்தையர்மால்வலைக்கே.......(௰௩)

மாலைக்கல்லாரமடவார்புண்ணுக்கையில்வாஞ்சைவைத்து.........*
மாலைக்கல்லாரம்புலிக்குளைநயாநிற்பர்மாய்விப்பதோர்............*
மாலைக்கல்லாரம்பயத்தாளில்வைக்குமதிலரங்க....................*
மாலைக்கல்லாரஞ்சலியாரென்னேசிலமானிடரே...............(௧௪)

மானிடராகவரலரிதோர்மண்டலத்தினெறி..........................*
மானிடராகமிலாதவுணுதன்மலரயனுர்..............................*
மானிடராகமத்தாறன்பராயவரங்கத்துளெம்.......................*
மானிடராகமலரடிக்காட்படுவாழ்வரிதே.......................(௧௫)

அரிதாமனாக்கணந்தோலுடுத்தாரயனுர்க்கரியான்..................*
அரிதாமனாக்கணம்மான்திருப்பாதமடைமின்சன்மம்..............*
அரிதாமனாக்கணந்தங்காதுயிரவனூர்வினவில்....................*
அரிதாமனாக்கணமீர்த்தோடும்பொன்னியரங்கமன்றே.......(௧௬)

அசங்காதுவார்கண்ணைகண்வள்ளைகோங்கினரும்புமங்கை..............*
அரங்காதுவார்முலையென்றைவர்வீழ்ந்தனராடரவின்...............*
அரங்காதுவாரமிலாமணியேயணியார்மதில்சூழ்....................*
அரங்காதுவாரகையாயடியேனுன்னடைக்கலமே..............(௧௭)

அடைக்கலந்தாயபத்தவர்போலுடலுறையைவனாடம்..............*
அடைக்கலந்தாயுலகங்கொண்டதாள்களுக்கண்டமுண்டால்........*
அடைக்கலந்தாயசங்காவாயர்பாடியிலன்றுநெய்பால்.............*
அடைக்கலந்தாய்வைத்துவாய்நெரித்தூட்டவழுமையனே....(௧௮)

ஐயமருந்திவையுண்ணென்றுமாதரட்டேடுஞ்செல்வம்...........*
ஐயமருந்தினைப்போதேயவரின்பமாதலினுல்......................*
ஐயமருந்தியக்கங்குறுகாமுன்னரங்கர்க்கன்பாய்...................*
ஐயமருந்தியும்வாழ்தின்கண்மேலுமக்காநந்தமே...............(௧௯)

நந்தமரங்கனைமாகடலேழுநடுங்கவெய்த..............................*
நந்தமரங்கனைப்பற்றுநெஞ்சேவினைநைபுமுன்கை..................*
நந்தமரங்கனையார்மயல்போம்வருநற்கதிவா.........................*
நந்தமரங்கனைவர்க்குமென்ஞான்றுநரகில்லையே...............(௨௰)

நரகந்தரம்படவியிம்மைமன்றிடத்துநனிமருவி....................*
நரகந்தரங்கித்துவெங்காலற்கஞ்சுவர்நாயகவா....................*
நரகந்தரம்புட்பிடரோறரங்கர்நலலாய்க்குலத்தி....................*
நரகந்தரங்கமுற்றாரடியார்க்குநமனஞ்சுமே....................(௨௧)

அஞ்சக்கரத்தலைக்கங்கையனேற்றலுமஞ்சிற்றைய....................*
அஞ்சக்கரத்தலைக்குண்டிகையாண்மண்டையங்கைவிட்டே....................*
அஞ்சக்கரத்தலைச்செய்துபித்தேகவருளரங்கன்....................*
அஞ்சக்கரத்தலைவன்றாளலான்மற்றரணிலையே....................(௨௨)

இலங்கையிலாதரனைங்கரன்மோடியெரிசுரத்தோன்....................*
இலங்கையிலாதமலையானவீசனிரியவெம்போர்....................*
இலங்கையிலாதபடிவாணனைச்செற்றவென்னரங்கன்....................*
இலங்கையிலாதவன்போகக்கண்டானென்னிமயத்தனே....................(௨௩)

அத்தனைவேதனையீன்றவரங்கனையைம்படைசேர்....................*
அத்தனைவேதனைவாய்வைத்தமாயனையாரணங்கோர்....................*
அத்தனைவேதனைத்தீர்த்தானைச்சேர்க்கிலளாயிரஞ்சால்....................*
அத்தனைவேதனையப்புவள்சாந்தென்றனலணைத்தே....................(௨௪)

அளைக்கலைவேலையுடுத்தமண்பல்பகலாண்டுபற்றல்....................*
அளைக்கலைவேலையுடைவேந்தர்வாழ்வெண்ணலைவளையும்....................*
அளைக்கலைவேலையவர்க்கேபுரிவையென்றாலுநெஞ்சே....................*
அளைக்கலைவேலையரங்கனுக்காட்படவாதரியே....................(௨௫)

ஆதவனந்தரந்தோன்றுமற்கன்மழையார்த்தெழுநாள்....................*
ஆதவனந்தரவெற்பெடுத்தானடியார்பிழைபார்....................*
ஆதவனந்தரங்கத்தானரங்கனடியெனென்றுள்....................*
ஆதவனந்தரங்கண்டீர்வினைவந்தடைவதுவே....................(௨௬)

அடையப்பன்னகங்கிடிவாயமுதுகவங்கிகுளிர்....................*
அடையப்பன்னகமருப்பாயுகமிறவன்றுகுன்றால்....................*
அடையப்பன்னகமிசைதாங்கபாலற்கருள்செய்ததால்....................*
அடையப்பன்னகங்கரியானரங்கனெட்டக்கரமே....................(௨௭)

திருவரங்கத்தந்தாதி

அக்கரவம்புனைந்தாரயனுரினடையாயிருநால்.......................*
அக்கரவம்புமலராள்கொழுனனரங்கன்செங்கோல்...................*
அக்கரவம்புயன்றான்மூலமென்பதறிவித்திட்டான்....................*
அக்கரவம்புவிமேல்வேழமேவெளியாக்கியதே..................(௨௮)

ஆக்குவித்தார்குழலால்ரங்கேசரன்பால்விதுரன்......................*
ஆக்குவித்தாரவடிசிலுண்டார்கடலாடையகல்..........................*
ஆக்குவித்தாரறிவற்றேனைத்தம்மடியார்க்கடிமை......................*
ஆக்குவித்தாரடியேயடியேன்றுய்க்குமாரமுதே...............(௨௯)

ஆராதனஞ்செய்துகண்டனின்சீர்த்தியறைவன்றிரு.......................*
ஆராதனஞ்செய்வன்வேதாவென்றாலடியேன்புகழ்கைக்கு... ,....*
ஆராதனஞ்செய்யபோதாந்திருமகளாகபல்பூண்.......................*
ஆராதனஞ்செயன்பாகாவரங்கத்தமர்ந்தவனே....................(௩௰)

அமர்வர்ம்பையினல்லார்பலர்நிக்காப்பெடுப்ப......................*
அமரவரம்பையில்வேல்வேந்தர்சூழமண்ணுண்டிருந்தோர்.........*
அமரவரம்பையில்கான்போயிறந்தனராதலில்வீடு.....................*
அமரவரம்பையின்மஞ்சாரரங்கருக்காட்படுமே...................(௩௧)

ஆளாகவந்தவடியேற்கருள்பரியானைதிண்டேர்.........................*
ஆளாகவந்தனிற்செற்றிலங்கேசனையட்டவல்வில்......................*
ஆளாகவந்தன்புயந்துணித்தாயரங்காமுளரி...........................*
ஆளாகவந்தமிலுன்னடியார்க்கன்பனாவதற்கே...................(௩௨)

ஆவாகனத்தர்டியார்மனத்துட்புள்ளாணவொப்பில்......................*
ஆவாகனத்தரரங்கர்பொற்றாளுக்கடிமைப்பட்டார்......................*
ஆவாகனத்தவழுக்குடல்பேணிபறிவிழந்தவ்.........................*
ஆவாகனத்திருந்தென்னிராமலென்னம்புவிக்கே..................(௩௩)

அம்புவிலங்கைநகர்பாழ்படச்சங்குமாழியும்விட்டு....................*
அம்புவிலங்கைகொண்டாயரங்காவன்றிடங்கர்பற்றும்..................*
அம்புவிலங்கையளித்தாயினியென்னையாசையென்றிய்................*
அம்புவிலங்கையிட்டேசஞ்சிறையிலடைத்திடலே..................(௩௪)

இடவமலைக்கும்புயங்கமலைக்குமிலங்குமக்கள்..........................*
இடவமலைக்குமிருங்கமலைக்குமிறைவசங்கம்... ... ...*
இடவமலைக்கும்புனலரங்காவெட்த்தமார்க்கண்டன்கண்டு..........*
இடவமலைக்குமுலகழியா துள்ளிருந்ததென்னே...............(௫௫)

இருந்தையிலங்கவெளிறுபட்டாதென்செய்தாலுநிம்பத்து..........*
இருந்தையிலந்தித்தியாதவைபோற்புல்லர்யாவுங்கற்றுய்ந்து.....[து
இருந்தையிலம்பளன்கண்ணூர்க்கல்லால் வெண்ணெயில்லி லொளித்
இருந்தையிலங்கையரங்கர்க்கன்பாகியிருக்கிலரோ..............(௫௬)

இருக்குமந்தத்தில்றியாவரங்கன்மண்ணேழுண்டுந்தய்...........*
இருக்குமந்தத்திருவாய்மலர்ந்தானெட்டெழுத்தைக்குறி..........*
இருக்குமந்தப்பத்தியீர்த்துநல்விடெய்தலாகுங்கைபோய்.........*
இருக்குமந்தச்செவிட்டுமேன்முந்நீர்க்கடந்தேறிடிலே..........(௫௭)

ஏறுங்கரியும்பரியுஞ்செற்றான்பர்னென்றுமன்றுள்...............*
ஏறுங்கரிமறையாதலினலையம்யா துமக்கிடே.........................*
ஏறுங்கரியவரங்கர்க் கன்பாய்வினையென்னுமிடி....................*
ஏறுங்கரியுமினிமேற்பிறவியிட்டரில்லையே..........................(௫௮)

இடராகவந்தென்னைட்புன்சிறுதெய்வங்களென்செயுமான்..........*
இடரர்கவன்பிணிமாநாகமென்செயும்யான்வெருவி...................*
இடராகவன்னிபுன்விடிகோண்மற்றுமென்செயும்வில்...............*
இடராகவன்னரங்கன் றிருத்தாளென்னிதயத்ததே.................(௫௯)

அத்திரங்காயமெனவுணரேனெனதாசையுன்கை.........................*
அத்திரங்காயத்தியிற்பெரிதானவையாகிப்பல்வீழ்.....................*
அத்திரங்காய ந்திரம்போற்பொறியைந்தழியுமக்கால்...............*
அத்திரங்காயரங்காவடியேனுன்னடைக்கலமே......................(௬௰)

கலக்கூழைக்கைக்குங்கருத்துண்டயீரரங்கத்துளிலைக்...............*
கலக்கூழைக்கைக்குங்கறியிட்டுத் துய்த்திருங்கா துபடைக்..........*
கலக்கூழைக்கைக்குள்வருவாணைகண்ணுதலும்விட்ட..............*
கலக்கூழைக்கைக்குப்டைகண்டானைவீதியிற்கண்டுவந்தே.....(௬௧)

திருவரங்கத்தந்தாதி

கண்டகனவின்பொருள்போலயாவும்பொய்காலனென்னும்......*
கண்டகனவிகவர்வதுவேமெய்கதிநல்கெனக்..........................*
கண்டகனவிப்பொழுதேசெல்கென்றருள்காரரங்கன்..............*
கண்டகனவின்புறக்கண்டுவாழ்த்திக்கடிதுய்ம்மினே..........(சஉ)

கடிக்கும்பணிதஞ்சமூதாகுந்தீங்குநன்காகும்பராக்..............*
கடிச்கும்பணியலர்தாழ்வார்கல்லாமையுங்கற்றமையாம்..........*
கடிக்கும்பணியறமெல்லாமரங்கர்பைங்கன்னித்துழாய்க்...........*
கடிக்கும்பணியொளிக்குநல்லபாதங்கருதினர்க்கே...............(சங)

தினகரனூர்கலிதீகாற்றொடுங்குஞ்செயலும்விண்மீ...............*
தினகரனூர்கொண்டலேழ்செருக்காமையுஞ்சென்றெதிர்மோ....*
தினகரனூருயிர்செற்றாரரங்கர்திகிரிசங்கேந்.........................*
தினகரனூர்நம்பெருமாளமைத்ததிருக்கைகண்டே..............(சச)

திருக்காவிரிக்கும்யமுனைக்குங்கங்கைக்குந்தெள்ளமுதாம்.........*
திருக்காவிரிக்குங்கடற்கும்பிரான்றென்னரங்கமென்னத்..........*
திருக்காவிரிக்குமொழியார்க்குத்தீமெழுகாவிரன்பயித்...........*
திருக்காவிரிக்குமதெவ்வாறவனுங்கள்சென்மத்தையே.........(சரு)

சென்மந்திரங்கங்கருமஞ்சுழிபிணிசேலினங்கு.........................*
சென்மந்தரங்கதிர்பொன்கோள்கண்மாரிதிண்கூற்றசனி...........*
சென்மந்தரங்கவற்றுள்விழுவோர்கரைசேர்க்கும்வங்கஞ்.........*
சென்மந்தரங்கவின்றோளாரரங்கர்திருப்பதமே..............(சகா)

பதக்கமலங்கலணிமார்பபொன்னிபடிந்திமையோர்................*
பதக்கமலங்களறுசீரரங்கபகட்டுயிரா.................................*
பதக்கமலங்கரித்தூர்வோன்சிவனயன்பார்க்கவந்துன்..............*
பதக்கமலங்களடியென்றலைக்கென்றுபாலிப்பதே..............(சஎ)

பாலனஞ்செய்யமர்நாடாண்டுபூணொடுபட்டணிந்து..............*
பாலனஞ்செய்யகலத்துண்டமாதர்பல்போகத்தையும்..............*
பாலனஞ்செய்யவிருப்பதிலையம்பருகிநந்தன்.........................*
பாலனஞ்செய்யவள்கோமானரங்கம்பையில்கைநன்றே........(சஅ)

மையிலத்திமூளைநரம்பூனுதிரம்பரந்தகுரம்..................*
மையிலத்தியள்விளைபாண்டமென்னுமற்புன்பாவையர்தோற்......*
மையிலத்திசெய்துநரகெய்துவீருய்யப்பற்றுமினே...............*
மையிலத்திமேவித்துயில்கூரரங்கர்பொற்பாதத்தையே.......(சகூ)

பாதகங்கைக்குமரங்கர்பல்பேய்பண்டிராவணனுற்...............*
பாதகங்கைக்குமென்றெள்ளக்கொய்தார்படிக்கேற்றதிருப்.......*
பாதகங்கைக்குள்விழுமுன்னமேபங்கயன்விளக்கும்...............*
பாதகங்கைக்குளிர்நீர்வீழ்ந்ததீசன்படர்சடைக்கே..............(ருய)

படநாகத்தந்தரமீதிருப்பானெம்பரனரங்கன்...................*
படநாகத்தந்தம்பறித்தோன்புகழைப்பரவுமின்க..................*
படநாகத்தந்தக்கரணம்பொல்லான்சிசுபாலன்முற்பல்..............*
படநாகத்தந்தவசைக்குந்தந்தான்றெல்பரகதியே............(ருக)

பரவையிலன்னகட்பாஞ்சாலிநின்பரமென்னநிரு.................*
பரவையில்மேகலையீந்தானரங்கன்பணிந்திமையோர்...............*
பரவையிலாழிப்பிரானடிக்கீழுற்பவித்தழியும்....................*
பரவையில்மொக்குளைப்போற்பலகோடிபகிரண்டமே........(ருஉ)

அண்டமடங்கலையுந்தந்துகாத்தவையந்தந்தன்பால்..............*
அண்டமடங்கலைச்செய்காரணமம்பொன்முத்தலைவான்...........*
அண்டமடங்கலைபீர்த்தோடும்பொன்னியரங்கன்புட்கார்..........*
அண்டமடங்கலுமுந்நீர்மதளுகப்பாகவென்றே..................(ருந)

ஆகமதிக்குமுகமேன்முகமுடையானயன்வாழ்.................*
ஆகமதிக்குநவநீதக்கள்வவனிகொள்வார்......................*
ஆகமதிக்குளஞ்சேரரங்காவுன்னையன்றித்தெய்வம்..................*
ஆகமதிக்குளெண்ணேனடியேன்பிறராயுமே...............(ருச)

ஆரத்தநந்தருந்தாய்தந்தையரந்தமாவரிகழ்.....................*
ஆரத்தநந்தனன்றீமைகண்டாலங்கௌத்துவபூண்..................*
ஆரத்தநந்தசயனவணியரங்காநிகிரி..........................*
ஆரத்தநந்தன்மதலாயென்றீங்குணக்கத்தன்மைத்தே.........(ருரு)

அத்தனுமன்புளவன்னையும்பெருமனந்தமதாம்...................*
அத்தனுமன்புலனுதலினுண்டருளம்புயைவீர்...................*
அத்தனுமன்புயமீதேறரங்கனஞ்சார்ங்கவயிர்...................*
அத்தனுமன்புகல்பேரிருவீர்க்குமடியனென்றே.............(ருசு)

அடியவராகவுமாட்கொள்ளவுமெண்ணியாருயிர்கட்கு..............*
அடியவராகம்படைத்தமையாலகமேபெரிய...................*
அடியவராகவரங்கருக்காட்செயருட்கதையால்...................*
அடியவராகஞ்செய்மாரனுக்காட்செயுமைவளையே............(ருஎ)

வளையாழிவண்ணரரங்கேசர்சன்முன்வாணன்றிண்டோள்..........*
வளையாழியார்புள்ளின்வாகனத்தேவந்தநாட்டொடிற்றை..........*
வளையாழிய துயராய்த்தூசுநானுமதிடஞ்செங்கை...............*
வளையாழியும்வளையுமிழந்தாளென்மடமகளே.............(ருஅ)

மகரந்தகர்தலைவர்ழ்வென்னவாரிசுட்டாய்திதிதன்...............*
மகரந்தகாதலைவானினுள்ளோர்க்குமண்ணோர்க்குவட்ட..........*
மகரந்தகாதலைவார்குழையாய்வளர்சீரங்கதா..................*
மகரந்தகாதலைவாக்கிற்சொல்லேன்மடவாரொதிரே............(ருகூ)

வர்ராகவர்மனனேயரங்கர்வட்டநேமிவல்.....................*
வாராகவாவுன்வடிவுகண்டான்மன்மதனுமட.................*
வாராகவாதரஞ்செய்வனென்றுலுய்டம்வண்ணமெங்கே.........*
வாராகவாசமுலையேனைப்போலுள்ளமாதருக்கே...........(சுய)

மாதம்பத்துக்கொங்கையும்மல்குற்றேரும்வயிறுமிலை ....*
மாதம்பத்துக்குறியுங்கண்டிலேம்வந்துதோன்றினை பூ..........*
மாதம்பத்துக்கெதிர்மார்பாவரங்கத்துவாழ்பரந்தா..............*
மா தம்பத்துக்கருத்தில்லார்பிறப்பென்பர்வையகத்தே.......(சுக)

வைகுந்தர்தாமரைபோற்பாதர்நாகத்துமா நர்புட..............*
வைகுந்தமேற்கொண்டிருந்தோர்வடிவைந்தின்வாழுமிடம்......*
வைகுந்தம்பாற்கடன்மாநீரயோத்திவண்பூந்துவரை............*
வைகுந்தமன்பர்மனஞ்சீரரங்கம்வடமலையே.................(சுஉ)

வடமலைதென்மலைகச்சிகுறுங்குடிமானிற்பது.........................*
வடமலைவேலையரங்குடந்தைவளருமிடம்.........................*
வடமலைகொங்கைத்திருவோடிருப்புவைகுந்தங்கர.....................*
வடமலையன்பருளநடையாட்டமறையந்தமே..................(௬௩)

அந்தக்ராசலம்வந்தாலுனையழையாதிருப்பார்......................*
அந்தகராசலங்காபுரியார்க்கரங்காமறையின்.........................*
அந்தகராசலக்கூக்குரலோயுமுன்னாழ்தடங்கல்......................*
அந்தகராசலத்தேதுஞ்சநேமியறுக்கக்கண்டே..................(௬௪)

அறுகுதலைப்பெய்பனிபோன்றதா திருவாய்ப்பிறந்தல்...........*
அறுகுதலைப்பிள்ளையாய்க்காளையாய்க்கிழமாகியையள்...........*
அறுகுதலைச்செய்துவீழ்காயநானென்னுமாரிருளை...............*
அறுகுதலைக்கொள்பணியரங்கா நின்கணைசைதந்தே...........(௬௫)

ஆசுகவிக்குநிகரொனக்கில்லையென்றற்பனாப்பூ.....................*
ஆசுகவிக்குவில்வேள்வடிவாவறிவாலகத்திப்.........................*
ஆசுகவிக்குவலயமன்னவென்றரற்றியிரந்து.........................*
ஆசுகவிக்கும்புலவீர்புகழ்மினரங்கனையே......................(௬௬)

கனகவிமானமற்றீனர்க்குனக்கிலென்கால்பெற்றவா...............*
கனகவிமானற்கருடப்புள்ளூர்தியைக்கான்மலர்கோ..................*
கனகவிமானம்புவிமான்றடவரக்கண்வளரும்.........................*
கனகவிமானத்தரங்கனைநாச்சொல்லக்கற்றபின்னே..........(௬௭)

கற்றினமாயவைகாளையர்வான்கண்டுபீணினைவ......................*
கற்றினமாயமுநிகன்றுகாளையராகிப்பல்ப.........................*
கற்றினமாயர்பரிவுறச்சேரிகலந்தமையும்.........................*
கற்றினமாயவொண்ணாவரங்காசெங்கமலற்குமே.............(௬௮)

கமலங்குவளைமடவார்தனங்கண்களென்றுரைத்த....................*
கமலங்குவளைமுதுகாகியுங்கணைவீர்புணற்கா.....................*
கமலங்குவளைவிளையாடரங்கன்விண்காற்றுகனல்.................*
கமலங்குவளையண்டான்றெண்டராயுய்ம்மின்காமமற்றே.....(௬௯)

காமனத்தால்விழவூதியக்காவைக்கவரரங்கன் .... *
காமனத்தாவென்றுநைவார்க்கமுதன்கன்னெஞ்சர்க்கிரங் .... *
காமனத்தானளக்குங்கடற்பார்கலம்போன்றதுபீ .... *
காமனத்தாமரையோன்கங்கைபாய்மரங்கான்மலரோ .... (௭௰)

மலருந்திமேல்விழமெய்நெரித்தான்வையமேழுந்துஞ்சா .... *
மலருந்திருணரங்கன்குறளாய்மண்ணளந்தவந்நாள் .... *
மலருந்திவாக்கதிர்வண்குடையாட்முடிமாமணியாய் .... *
மலருந்தியாய்த்திருத்தாள்விரலாழிமணியொத்ததே .... (௭௧)

மணிவாசற்றரங்கவொருகுடைக்கீழ்வையங்காத்துச்சிந்தா .... *
மணிவாசவனெனவாழ்ந்திருப்போர்பின்னுமாதிருக்கும் .... *
மணிவாசமார்பரங்காகேசவாவென்றுவாழ்த்தித்திரு .... *
மணிவாசகங்கொண்டணிவாரடியைவணங்கினரே .... (௭௨)

வணங்கரியானரங்கனடியார்தொழவாளரவு .... *
வணங்கரியாடற்பரிதேர்நடத்தெந்தைவானவர்க்கும் .... *
வணங்கரியானன்றிக்காப்பாரில்லாமைவிண்மண்ணறிடம் .... *
மணங்கரியானவர்வாணன்கண்டாகவென்மார்க்கண்டனே ...... (௭௩)

கண்டலங்காரள்கந்கெண்டைமேகங்கவரித்தழ்சொல் .... *
கண்டலங்காரமுலையிளநீரொன்றுகன்னியர்சீர் .... *
கண்டலங்காரமருளேன்புனற்கயல்கொக்கென்றஞ்சக் .... *
கண்டலங்காரமலிரங்கேசர்க்குக்காதலனே .... (௭௪)

காதலைவாரிமண்வெண்கோட்டில்வைத்துண்டுகாட்டியரங் .... *
காதலைவாகழற்குள்ளாக்கிணைப்கரப்பெங்கெனவே .... *
காதலைவார்குழைவைதேகியைநின்கருத்திருக்கும் .... *
காதலைவானரர்த்தேடவிட்டாயிதுவைகதவமே .... (௭௫)

தவராகவக்கண்ணையொருன்றுற்கடற்றெய்வந்தானென்னிருந் .... *
தவராகந்தீர்த்துத்தொழக்கண்டநீதர்ப்பைமேற்கிடந்து .... *
தவராகப்பாவித்தென்னேதொழுதாய்தண்ணரங்கத்துமா .... *
தவராகவாகண்ணனேயெண்ணெணவவதாரத்தனே .... (௭௬)

தாராகணமண்ணளந்தவந்நாளன்பர்சாத்துந்துழாய்த் ....*
தாராகணம்படியும்போலரங்காதலமேழுக்குமா ....*
தாராக்கணமங்கையாடம்பர் தூவியதண்மலர்வீழ்.......*
தாராகணமுநில்லாகாற்றிற்சூழ்வளந்தாரெனுக்குமே.......(எஎ)

தானந்தியாகந்தவங்கல்விதீர்த்தந்தழலிலவி.......*
தானந்தியாகந்தருமிழிபாயினதண்ணரங்கத்.......*
தானந்தியாகப்பகன்மறைத்தான்பெயர்தந்திடும்வே.......*
தானந்தியாகண்டலனறியாப்பரந்தாமத்தையே.......(எஅ)

தாமனைமாத்திரைமூப்பற்றவானவர்தண்ணறுஞ்செந்.......*
தாமனைமாத்திரைவந்தாடலைவனைத்தண்ணரங்க.......*
தாமனைமாத்திரைபோல்வளைந்தேற்றுத்தருட்பொருட்டால்.....*
தாமனைமாத்திரைக்கேசங்கிணைசையிற்சாய்ந்தனரோ.......(எகூ)

சாலைக்குந்தத்துத் துகில்தூக்கிமாதர்தமைநகைத்தாய்........*
சாலைக்குந்தத்துவங்கட்குமெட்டாய்தண்புனலரங்கே........*
சாலைக்குந்தத்துட்புடையாழியேந்தல்தமர்கள்வெய்யோர்.......*
சாலைக்குந்தத்துதவிர்கைக்கும்பேரனுமுன்சங்கற்பமே.....(அய)

சங்கத்தமரர்குழாத்தொடுமுள்வினைதான்விலங்க.......*
சங்கத்தமரன்பராயிருட்பிர்கடல்தானவர்தே.......*
சங்கத்தமரம்படவெய்தசார்ங்கத்தனுவரங்கன்.......*
சங்கத்தமரன்சரணேசரணென்றுதாழ்ந்திருமே.......(அக)

இருந்தேனுகமுடவன்வரைநோக்கியிருப்பதுபோல்.......*
இருந்தேனுகந்துணைவைகுந்தநோக்கியெதிர்பொருங்கேள்......*
இருந்தேனுகனும்படவதைத்தாய்வெண்ணெயமத்தொளித்து...*
இருந்தேனுகரரங்காகானுநாளினியென்மருளே.......(அஉ)

அரும்பாகவதரிக்கும்பெயராய்ப்புள்ளரசினுக்கோர்.......*
அரும்பாகவந்தரந்துப்பனையாயரங்காவெனவுண்.......*
அரும்பாகவதர்பததீர்த்தங்கொள்ளாதடிகள்கொப்புலி.......*
அரும்பாகவதர்தொலைப்பார்கல்லார்கங்கையாடுதற்கே.......(அங)

ஆடுமுன்னீர்முதற்றீர்த்தத்தினாலருமாதவத்தால்.................*
ஆடுமுன்னீர்மறைவேள்வியினாலண்டராயுடன்மாறு.............*
ஆடுமுன்னீரதுமாயையினாலென்றரங்கனைக்கொண்டு.............*
ஆடுமுன்னீர்செய்தபாவமும்போய்முத்தராம்வண்ணமே...(௮௪)

வண்ணங்கலிவஞ்சிவெண்பாவகவல்வகைதொடுத்தோர்..........*
வண்ணங்கலிகெடவேண்டுமென்றேமக்கண்மூட்டுனையேன்....*
வண்ணங்கலிகடல்போல்வானரங்கன்வருளச்செல்வன்..........*
வண்ணங்கலியன்புகழ்தாளெனக்கென்றுமாநிதியே........(௮௫)

மானுக்கவருந்திருந்தன்புன்மாயையின்மூங்கையென்னு...............*
மானுகவருமணியைமுன்னீங்கின்மாயனென்பார்...............*
மானுக்கவரும்பலர்சோலைசூழுமதிலரங்கா.......................*
மானுக்கவருமமுதேயதுவுநின்மாயமன்றே...................(௮௬)

மாயார்தவர்தலைவாவரங்காவட்டமீராம்தினா.........................*
மாயாத்தவரண்டர்வந்தடைந்தான்மழுவாளிபிர...................*
மாயாதவர்செய்வர்முந்நூல்செந்நூல்கொண்டவண்ணமொப்ப.*
மாயாத்தவரத்தனைக்குடல்கோத்ததுன்வாணகமே............(௮௭)

நகமுண்டகந்தரித்தார்க்கருண்மாயர்க்குஞாலமுந்நீர்............*
நகமுண்டகமகிழ்ந்தார்க்கடியேமென்பினற்கதிவா................*
நகமுண்டகம்பரனென்றுத்தரங்கனைநாடிலம்பம்....................*
நகமுண்டகமலர்தான்குவியாதுநடுக்குளத்தே...............(௮௮)

குளப்படிநெய்யடிசிற்கொத்ததோகொள்ளப்பற்றியதோ........*
குளப்படியிற்றிங்கள்சேரரங்காகோலமாயவன்றன்................*
குளப்படிகாட்டும்பிறைமறுப்போலொருகோட்டிருந்து........*
குளப்படியின்னகத்துட்பரல்போன்றகுவலயமே..........(௮௯)

குவலயஞ்சூழ்கடல்காயாமர்கதங்கொண்டனைத்தல்.............*
குவலயங்கண்டன்பர்நைவரொன்றூற்கொற்றவாணற்குவா.........*
குவலயநேமிதொட்டாயரங்காகொடும்பல்பிறப்பா................*
குவலயங்கற்றுனைக்காணிலென்னுங்கொல்குறிப்பவர்க்கே...(௯௰)

குறியானைச்செங்கணெடியானைவானவர்கோவைச்சங்கக்.........*
குறியானைவித்ததிருவரங்கேசனைக்கூவிநின்று.........................*
குறியானைகாத்தவனைப்பாடினேன்கொடிகூப்பிடினும்.........*
குறியானையப்பவர்போற்கொடியேன்சொலுங்கொள்வனென்றே.*

வனத்திற்சிலம்பிவிடுநூலுட்பட்டுமசகமெய்த்த.................*
வனத்திற்சிலம்பினபோற்பிணிவாய்ப்பட்டென்வாய்புலம்பின்....*
வனத்திற்சிலம்பின்குரலன்னம்வாழுமரங்கனிப்பு.................*
வனத்திற்சிலம்பினின்றுன்கேட்குமோவும்பர்வாழ்த்தைவிட்டே...*

விடத்தேனாமன்னும்வனப்பாழ்ங்கிணற்றுள்வெம்பாம்புற்றும்.*
விடத்தேனைவாய்வண்டுதேன்வேட்டல்போல்விசித்துக்கொடுபோய்
விடத்தேனையில்வெங்கட்கூற்றையெண்ணுதெண்ணும்வேட்கையெ
விடத்தேனையூரரங்கன்றிருத்தாளில்விழுநெஞ்சமே.(௯௩) [ல்லாம்

விழுங்கூன்றலைச்சுவர்நீர்மலங்கோழைவெம்பித்தொடுங்க.......*
விழுங்கூனரம்புறியென்பேணிதோற்சட்டைவீழ்ந்துநொந்த....*
விழுங்கூந்தலாரழப்பாடையிற்போய்ச்சுடும்வெய்யசெந்தீ......*
விழுங்கூனநோய்க்குடில்வேண்டேனரங்கவிமானத்தனே.....(௯௪)

மானத்துவண்டலுழவோரெழுத்தின்வடிவுற்றசிர்...................*
மானத்துவண்டவினையாளராயினுமால்வளர்வி.....................*
மானத்துவண்டலமாமரங்கம்வழியாவரினும்.......................*
மானத்துவண்டமர்தாரண்டராம்பதம்வாய்க்குமங்கே........(௯௫)

அங்காக்கைக்கேமங்கைக்சீந்தானரங்கனவனிக்குவரீப்..............*
அங்காக்கைக்கேபசித்தானிற்கவேமுத்தியாக்கித்துயர்..............*
அங்காக்கைக்கேசிலர்வேறேதொழுவரருந்திரவிய்...................*
அங்காக்கைக்கேதனத்தாள்தருமோதிருவன்றியிலே.........(௯௬)

அன்றேபடையவுனக்கேயடிமையென்றுய்ந்துணர்ந்தார்........*
அன்றேபடையப்படுவாருனையரங்காவனத்திற்.....................*
அன்றேயடையைப்பயில்வோருமீதறியாரறிஞர்......................*
அன்றேபடையைப்புலனூலுநன்கில்லையாங்கவர்க்கே...........(௯௭)

ஆங்காரமாமின்னைத்தோய்மார்பரங்கனளையினையுண்டு..............*
ஆங்காரமானிலமுண்டாற்குத்தொண்டனிவ்வண்டத்தப்பால்.......*
ஆங்காரமான்பகுதிப்பறம்போயமுதாற்றிற்படிந்து.................*
ஆங்காரமானடிகாண்பேணவன்றனருள்சிந்தித்தே...............(௯௮)

சிந்தாகுலமுய்யக்குன்றெடுத்தாய்தென்னரங்கசுற்றும்... ......*
சிந்தாகுலகம்படைத்தளித்தாய்நிலஞ்சென்றிரந்த..............*
சிந்தாகுலவுசெல்வந்தந்தைதாட்குருதெய்வமுநீ...................*
சிந்தாகுலமடைந்தேனடியேன்சென்மந்தீர்த்தருளே.......(௯௯)

திரத்தரங்கப்பவநோய்துடைத்தென்னைத்தேவரொடும்... .. ...*
திரத்தரங்கப்பணிகாப்பவைத்தசெயலென்படதோர்...................*
திரத்தரங்கவபயமென்றூர்க்குந்திரைப்பொன்னிசூழ்............*
திரத்தரங்கன்சிலம்பார்ந்தசெய்யதிருவடியே........................(௱)

பணவாளரவினரங்கேசர்தாளிற்பருதிவள்ளை.........................*
நிணவாளஞ்சார்ங்கங்கதைதோளிற்சாத்தினனீணிலமேற்..........*
குணவாளராம்பட்டர்க்கேழேழ்பிறப்புங்குடியடியான்... ....*
மணவாளதாசன்யமகவந்தாதிவனைந்தனனே...................(௱௧)

☞ அழகியமணவாளதாசர்திருவடிகளேசரணம்.

திருவரங்கத்தந்தாதி-முற்றிற்று.